# பிவிருத்தி திட்ட உதவி இந்தவருடம் இடை நிறுத்தம்?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 17 இதழ் 325
பாணம் வெள்ளிக்கிழமை 0 — 01 — 1993

(கொழும்பு)

இலங்கைக்கான தனது அபிவிருத்தி திட்ட உதவிகளை சர்வதேச நாணய நிதியமும், உலகவங்கியும் இடைநிறுத்தலாமென கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்தஆண்டு இலங்கையில் பல தேர்தல்கள் நடக்கும் சாத்தியங்கள் இருப்பதால் மேற்படி இரு அமைப்புகளும் தங்கள் திட்டங்களை நிறுத்தும் சாத்தியமிருப்பதாக பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை நிலவுவதால் வெளிநாட்டவர் பலர் தங்கள் முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள பெரிதும் தயக்கம் காட்டி வருவதாகவும் அடுத்தவருடம் தேர்தல் ஆண்டாக இருக்குமென வெளிவந்த செய்திகளாலும் பல நாடுகள் முதலீடு செய்ய தயக்கம்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புலிகளுக்கு எதிராக பாரிய யுத்தம் நடத்த அரசு ஏற்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமானப்படைக்கு நவீனரக போர்விமானங்களையும், இராணுவத்தினருக்கு நவீனரக ஆயுத தளபாடங்களையும் அரசு இந்த வருடம் கொள்வனவு செய்யவுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்த வருடத்தில் அரசு மிகப்பெரிய யுத்தம் ஒன்றை மேற்கொள்ள விருப்பத்தையே இது எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தலைவர் ஹரி குணதிலக தெரிவித்துள்ளார். - இ

## பூநகரி கடலில் மோதல்

(யாழ்ப்பாணம்)

பூநகரி- கறுக்காய்த்தீவு கடற் பிராந்தியத்தில் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நேற்று முன்தின

(4 ம்பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்களுக்கென

# கப்பலில் வந்த உணவுப் பொருள்கள்

# வழியில் களவுபோனது கண்டுபிடிப்பு

## ...ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

...இருவருடங்களாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் எடுத்துவரப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியுடைய உணவுப்பொருள்கள் இடைவழியில் களவுபோனது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

...வு தொடர்பாகப் ...வாழ்வு அமைச்சுக்கு ...கப்பட்டதை அடுத்து ...த்து இரகசியப்பொலிஸ் விசாரணைக்கு அரசு ...ட்டுள்ளதாக தெரி...கிறது.

கொழும்பிலிருந்து கப்பலில் அனுப்பப்படும் பொருள்கள் இடை வழியில் களவு போவது தொடர்பாக யாழ். அரச அதிபர் செய்த புகாரைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஏற்கனவே விசாரணை நடத்திய புனர்வாழ்வு அமைச்சகம் அதன் அறிக்கையை புலனாய்வுப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளது (4ம்-பக்கம் பார்க்க)

## 93ல் பிரேமாவின் நிலை என்ன?

(கொழும்பு)

புதிய வருடத்தில் வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புதிய அணுகுமுறைகளைப் கையாளவேண்டிய நிலை ஏற்படுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவது அல்லது புலிகளுடன் கடுமையான யுத்தத்தைமேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படைகளுக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டுமென்று அவர்கள் மேலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி இன்று முதலாம் திகதி தனது சேவை நேரத்தை முப்பது நிமிடங்களால் அதிகரிக்கவுள்ளது.

இதுவரை காலமும் சுமார் தொண்ணூறு நிமிடங்கள் ஒலிபரப்பப்பட்ட புலிகளின் குரல் வானொலி இன்று முதல் தினமும் 120 நிமிடங்கள் சேவையாற்றும்.

## ...தெரிவுக் குழுவை தவிர்த்து

## பேச்சுக்களை ஆரம்பிக்க

# ...பலில் வந்த உணவுப் பொருள்கள்

# ...ழியில் களவுபோனது கண்டுபிடிப்பு

## ...ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

...இருவருடங்களாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் எடுத்துவரப்பட்ட பலகோடி ரூபா பெறுமதி ...டைய உணவுப்பொருள்கள் இடைவழியில் களவுபோனது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

...வு தொடர்பாகப் ...வாழ்வு அமைச்சுக்கு ...கப்பட்டதை அடுத்து ...த்து இரகசியப்பொலி ...விசாரணைக்கு அரசு ...ட்டுள்ளதாக தெரி ...கிறது.

கொழும்பிலிருந்து கப்பலில் அனுப்பப்படும் பொருள்கள் இடை வழியில் களவு போவது தொடர்பாகயாம். அரச அதிபர் செய்த புகாரைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஏற்கனவே விசாரணை நடத்திய புனர்வாழ்வு அமைச்சகம் அதன் அறிக்கையை புலனாய்வுப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளது (4ம்-பக்கம் பார்க்க)

## 93ல் பிரேமாவின் நிலை என்ன?

(கொழும்பு)

புதிய வருடத்தில் வடக்கு-கிழக்கு பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புதிய அணுகுமுறைகளைப் கையாளவேண்டிய நிலை ஏற்படுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்

விடுதலைப் புலிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவது அல்லது புலிகளுடன் கடுமையான யுத்தத்தைமேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படைகளுக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டுமென்று அவர்கள் மேலும் (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி இன்று முதலாம் திகதி தனது சேவை நேரத்தை முப்பது நிமிடங்களால் அதிகரிக்கவுள்ளது.

இதுவரை காலமும் சுமார் தொண்ணூறு நிமிடங்கள் ஒலிபரப்பப்பட்ட புலிகளின் குரல் வானொலி இன்று முதல் தினமும் 120 நிமிடங்கள் சேவையாற்றும்.

## ...தெரிவுக் குழுவை தவிர்த்து ...அரசு தீர்வை முன்வைக்குமா?

(கொழும்பு)

...னப்பிரசினைக்கு தெரிவுக் ...வின் தீர்வுத் திட்டத்தை ...ர்த்து. அரசு தீர்வு ...றை முன்வைக்கும் நோக் ...செயல்படுவதாக அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் அரசு தயாரித்த ஆவணம் ஒன்று எதிர்க்கட்சிகளின் கைகளில் கிடைத்ததன் மூலம் (வடக்கு- கிழக்கு மாகாணசபை என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஆவணம்) மற்றும் கொழும்பு பிரதி மேயர் திரு. கணேசலிங்கம் வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டு முழு அதிகாரங்களுடனும் விரைவில் தீர்வு இட்டுமெனக் கூறியதும் அரசு ஏதோவொரு திட்டத்தை தெரிவுக் குழுவிற்கு வெளியே முன் வைக்கப்போவதை உணர்த்துவதாக உள்ளதாம்.

தேர்தல் வெற்றியை நோக்கிக் கொண்டே இவ்வாறு அரசு செயல்படவுள்ளதாம். மேலும் கடந்ததிங்கட்கிழமை ஆடை திறப்பு விழாவில் பேசிய ஜனாதிபதி வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு ஒருதலைப் பட்சமாக தீர்வொன்று முன் வைக்கப்படும் பட்சத்தில் அதனை எதிர் கட்சிகள் எதிர்த்தால் நாட்டில் குழப்பநிலை தோன்றுமென கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

—இ

## புத்தாண்டு வாழ்த்துக்கள்



...வாசகர்கள். விளம்பர...கள், விற்பனையா...ள், அன்பர்கள் ஆத...ர்கள் அனைவருக்...எமது இதயம்... புத்தாண்டு ...த்துக்களைத் தெரி...க் கொள்கிறோம்.

—நிர்வாகி.

## மட்டு. வீதியோரங்களிலுள்ள பெரிய காடுகள் அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் வீதியோரங்களிலுள்ள காடுகளை அழிக்கும் முயற்சி ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு நாவலடி முதல் வெலிகந்தை வரையில் வீதிகளின் இருமருங்கிலுமுள்ள பெருமளவு காட்டுப்பகுதியை அழிக்கும் நடவடிக்கை நாளை இரண்டாம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை இவ்வீதிகளில் மேலதிக இராணுவ முகாம்களும் அமைக்கப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் புலிகள் மறைந்திருந்து மேற்கொண்டுவரும் திடீர், திடீர் அதிரடிகளைத் தொடர்ந்தே இக்காடழிப்பு வேலை ஆரம்பமாகவுள்ளது.

(க-சி-மி)

## பேச்சுக்களை ஆரம்பிக்க அரசுக்கு 3 நிபந்தனைகள்

(பாரீஸ்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சிறிலங்கா அரசுக்கு மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

★ ஆகாயத்தாக்குதல் ஷெல் தாக்குதல் நிறுத்தப் படவேண்டும்.

★ வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு உடனடியாக உணவுப் பொருள் விநியோகம் தங்கு தடையின்றி நடைபெறவேண்டும்.

★ தெரிவுக்குழு போன்றவற்றின் மூலம் தீர்வுகாண்பதை விடுத்து புலிகளுடன் அரசு நேரடியாகப்பேச வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளை விடுதலைப்புலிகள் சார் (4-ம் பக்கம் பார்க்க)

## 6 எலும்புக் கூடுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் - வங்காலையில் 1991-ம் ஆண்டு சிறிலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு ஆசிரியர்களின் அடையாள அட்டைகளும் ஆறு எலும்புக்கூடுகளும் வங்காலைப்பகுதி கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

வங்காலையிலிருந்து இடம் பெயர்ந்து மன்னார் சனிவிலேச் அகதி முகாமில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளை மீண்டும் வங்காலையில் மீளக் குடியமர்த்தும் நோக்குடன் அதிகாரிகள் கூட்டிச்சென்ற போது அங்கிருந்த கிணறு ஒன்றிலிருந்து இவை கண்டெடுக்கப்பட்டன.

1991-ம் ஆண்டு பெப்ரவரி (4ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' பஞ்சாங்கம்-93

ஈழநாடு மூவர்ண பஞ்சாங்கம் இன்றைய இதழுடன் இலவசமாக வழங்கப்படுகின்றது. தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

## ரெனியை கொலை சதி முயற்சி

(கொழும்பு)

புளத்சிங்கள பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னாள் நிதி அமைச்சர் திரு. ரெனி டி மெல் இருந்த வீட்டை நோக்கி ஐ. தே. க. களுத்துறைமாவட்ட எம். பி. திரு. சரத்ரணவாகவின் ஜீப்பிலிருந்து பல தடவை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் எனினும் திரு. ரெனிக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் 7வது இதழ் 12-1-93ல் வெளியாகும். ஆனந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (ஏ-2740)

### O L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவமுள்ள B. Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவலடி, திருநெல்வேலி. (சி-7096)

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய Karawilla Capsules, கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7053)

### விற்பனைக்கு

ஆட்டாமா, குரக்கன்மா, கடலைமா, ஒடியல்மா வகைகளை தொகையாகவும், சில்லறையாகவும் அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். (ஏ-2734)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாம் தரப் பரீட்சைக்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கி ஆண்டுகள் 6, 7, 8, 9 வகுப்புக்களில் சங்கீதம் பயில்பவர்கள் யாவருக்கும் பயன்படும் வகையில் சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா ஆக்கிய 'சங்கீதம் வினா விடை'' சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. (சி-7101)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலைவயல், சரும நோய்கள், வாதவிடாய்க் குத்து இரத்தப்போக்கு வெள்ளைகசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு.

### O/L ஆண்டு 10 வகுப்புகள்

O/L ஆண்டு 10 ற்கான புதிய வகுப்புகள் 02-01-93 சனி பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன யாழ். முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன ஒவ்வொரு பாடங்களும் வாரத்தில் மூன்று வகுப்புகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (சி-7108)

### நான் கடவுள் (தத்துவஞான நூல்)

நான் கடவுள் [சாயிபாபாவின் நான் யார்? தத்துவ ஞான உரைகளும் விண்ணப்படமும் ரூபா 15/- விற்பனையாகின்றது [நூலாசிரியர் சத்தியதாஸன்) உலண்டர்கள். பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்களுக்கும் ஆனந்தீஸ் புத்தக நிலையம். 21/B மணிக்கூட்டு வீதி; யாழ்ப்பாணம். மொடர்ன் புத்தகசாலை, நெல்லியடிச் சந்தி. (சி-7104)

### தேவை

டிமேக்கர், அட்டை செய்வோர் வேலைக்குத் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். ஆரியபவான் சைவ உணவகம், கைதடிச் சந்தி, கைதடி. (சி-7107)

### SPOKEN ENGLISH

3 மாத ஆங்கிலப் பயிற்சி கிழமையில் 2 நாட்கள் ஆரம்பம் 2 1 9; பி. ப. 3 மணி V. N Kandasamy A. I. B. Part I (London) Inter London; 87 திருநெல்வேலி ரோட் (பாலத்திற்கு அண்மையில்), கொக்குவில் (சி-7105)

### சிவாஸ் ஸ்ருடியோ இடமாற்றம்

பண்டத்தரிப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ருடியோ தற்பொழுது சித்தன்கேணியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது சிறந்த முறையில் விடியோ, கலர் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைப் படங்கள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். ''சிவாஸ் ஸ்ருடியோ, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை. (சி-7106)

### கலர் பிலிம் பிறின்ரிங்

துரித கதியிலும், குறைந்த செலவிலும் கலர் பிலிம் சுருள்கள் பிறின்ரிங் செய்யலாம். Quick Photo மணிக்கூட்டு வீதி, எழிலகத்துக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (சி-7098)

வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**ஜெயா பென்ஸி ஹவுஸ்**

160, நவீன சந்தை உட்புறம்

**ஜெயா அழகு சாதன மாளிகை**

177 A மின்நிலைய வீதி யாழ்ப்பாணம். (ஏ-2715)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

விடிவை நோக்கும் அனைவருக்கும்

**மங்களம் பொங்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

புடவை வணிகத்தில் நீண்ட கால முன்னோடிகள்.
திருமணம் மற்றும் சுப காரியங்களுக்கான
உயர் ரக பட்டுப் புடவைகளுக்கு

# சீமாட்டி (ஜவுளிகள் சமுத்திரம்)

122, மின்சார நிலைய வீதி, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். (ஏ-2744)

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள்

**புதுவருட வாழ்த்துக்கள்!**

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:

# நதியா நகை மாளிகை

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
இல. 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உங்கள் ஆதரவிற்கு நன்றி) (ஏ-2749)

---

இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத் திறப்புவிழாவும்

# "ராகபாவம்"

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: **மன்ற கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை

கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

## நிதியுதவி நிகழ்ச்சி

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை

5-00—6-30 நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: N. K. பத்மநாதன், S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்,
தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்

6-30—8-00 பரதநாட்டியம்:
நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்
நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலாபவனம்)
பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்

8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8-2-93 திங்கள் (இரண்டாம் நாள்)

நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி
தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன், R. S. சுதாகரன்

இசைக்கச்சேரி:
பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்

இன்னிசை வார்ப்புகள்:
இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G. சாந்தன், பொன்சி, வர்ண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம் மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்

9-2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள் "இசைவிழா" நடைபெறும்.

விசேட ஒலி. ஒளி:
ஒலி: நித்தி சவுண்ட்ஸ், யாழ்ப்பாணம்.
ஒளி: மனோ லைற், கோப்பாய்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

வாழ்த்துகிறோம்

**ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,**
772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
(ஏ-2739)

களை தொகையாகவும், சில்ல றையாகவும் அண்ணா கோப் பிய கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில்.
(எ-2734)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாம் தரப் பரீட்சைக்கான பாடத்திட் டத்தை உள்ளடக்கி ஆண்டு கள் 6, 7, 8, 9 வகுப்புக்களில் சங்கீதம் பயில்பவர்கள் யாவர்க்கும் பயன்படும் வகை யில் சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா ஆக்கிய 'சங்கீதம் வினா விடை'' சகல புத்தகசாலைக ளிலும் விற்பனையாகின்றது.
(சி-7101)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலை யிடி, தலைகாலவியல், சரும நோய்கள், வாதவிடாய்க் குத்து இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத் திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7035)

விடிவை நோக்கும் அனைவருக்கும்

**மங்களம் பொங்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

புடவை வணிகத்தில் நீண்ட கால முன்னோடிகள்.
திருமணம் மற்றும் சுப காரியங்களுக்கான
உயர் ரக பட்டுப் புடவைகளுக்கு

# சீமாட்டி (ஜவுளிகள் சமுத்திரம்)

**122, மின்சார நிலைய வீதி, (மேல் மாடி)**
**யாழ்ப்பாணம்.**
(ஏ-2744)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எங்கள்

**புதுவருட வாழ்த்துக்கள்!**

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்:

# நதியா நகை மாளிகை

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
இல. 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உங்கள் ஆதரவிற்கு நன்றி)
(ஏ-2749)

வயலின் — R. ராதாகிருஷ்ணன்
8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்
8-2-93 திங்கள் (இரண்டாம நாள்)

**நாதஸ்வர இசை:**
நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி,
V. K. பஞ்சமூர்த்தி
தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன்,
R. S. சுதாகரன்

**இசைக்கச்சேரி:**
பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்

**இன்னிசை வார்ப்புகள்:**
இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

## ★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G சாந்தன், பெஹி,
வர்ண ராமேஸ்வரன, பார்வதி சிவபாதம்
மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்
9-2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள்
"இசைவிழா'' நடைபெறும்.
விசேட ஒலி. ஒளி:
ஒலி: நித்தி சவுண்ட்ஸ், யாழ்ப்பாணம்.
ஒளி: மனோ லைற், கோப்பாய்.

பொன் சுந்தரலிங்கம்
தலைவர்

வாழ்த்துகிறோம்
**ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,**
772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
(ஏ-2739)

சுவை குன்றுமல் மேலை நாடுகளின் "சொக்லட்'' தரத்திற்கு இணையாக சொக்லட் உலகின் தனித்தயாரிப்பு "ரேஸ்ரி''

**அனைவருக்கும் 1993ன் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**



**Tasty!**

பண்டிகைக் காலங்களில்
உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
அன்பளிப்பாக வழங்க
எங்களது புதிய தயாரிப்பு
Any Time Chocolates

**உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்குங்கள்**

# TASTE LINE INDUSTRIES (Pvt) Ltd

No. 14, Seenier Lane, Jaftna.

தென்மராட்சியில் எமது பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**அறிவகம்** கண்டி வீதி, சாவகச்சேரி.
(எ-2741)

வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்
★ பாடசாலை புத்தகங்கள் ★ உபகரணங்கள்
★ காகிதாதிகள் மற்றும்
★ அச்சுவேலைகளுக்கும்
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-2719)

மாணவர்கள், விரிவுரையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Computer Basic, Lotus 1, 2 3
I. A. B. Shorthand - Typing நடைபெறுகின்றன
School of Business
Administration
(PIONEERS IN COMPUTER EDUCATION)
16, 3-rd CROSS STREET,
JAFFNA. (சி-7111)

அனைவருக்கும் எமது இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்
மலிவு விற்பனை
வாடிக்கையாளர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
பொங்கல் பண்டிகை வரை
நீடிக்கப்பட்டுள்ளது
லீடன் புடவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-2750)

எங்கள் வாடிக்கையாளர்கள், அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்
எரிக் கணேஷ்,
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி
வகைகளுக்கு மேலும் நாடுங்கள்
(ஏ-2747)

பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கம்
ஹோமியோபதி
மெடிக்கல் கிளினிக்
Dr. தி. பரமசிவம்
D. M. S. (கல்கத்தா), B. M. S. (ஸ்ரீலங்கா)
Member, Homoeopathy Medical Council
Member, Board of Examiners in Homoeopathy.
(சகல நாட்பட்ட நோய்களுக்கும் விசேஷ சிகிச்சை அளிக்கப்படும்)
புதியவிலாசம்:
521/5, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(நல்லூர் பழைய பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள ஒழுங்கை)
(சி- 7102)

### 93-ல் பிரேமாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்துள்ளனர்.

மேற்குலக ராஜதந்திரி ஒருவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் பேச்சுவார்த்தையானாலும் சரி யுத்தமென்றாலும் சரி திரு. பிரேமதாஸா மனம் தளராத ஒரு நிலையிலேயே உள்ளார்.

எனினும் அவரது முடிவு என்னவாக இருக்குமென ஆரும் கூறுவது மிகவும் கடினமாகுமெனக் கூறினார்.

### ரெஜினையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை களுத்துறை எம். பி. ரணவாகவின் சகோதரர் கீர்த்திசிறி ரணவாக தெரிவித்துள்வார். -சி-இ

### வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களவுபோன பொருள்களின் மதிப்பு பலகோடி ரூபாய்கள் இருக்குமென்றும் இக்கொள்ளை தொடர்பாக பல அரச அதிகாரிகள் சங்கடத்தில் சிக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி-க)

### பூநகரிக் கடலில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மிரவு 10 மணிக்குமேல் கடும் மோதல் ஏற்பட்டதாக அங்கிருந்து வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருமணித்தியாலம்வரை இடம்பெற்ற கடும்சண்டையின்பின்னர் படையினர் பின்வாங்கி படகுடன் ஓடித்தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நள்ளிரவுக்குப் பின்னர் படை முகாம்களிலிருந்து கடற்பரப்பினை நோக்கி கடும் ஷெல்த்தாக்குதல்களை படையினர் மேற்கொண்டிருந்தனர். -56

### பேச்சுக்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் திரு. லோறன்ஸ் திலகர் பாரீஸில் தம்மைச் சந்தித்த இலங்கை அமைச்சர் ஹமீதிடம் முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அமைச்சர் ஹமீத் அண்மையில் திரு. லோறன்ஸ் திலகரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் இச்சந்திப்பின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

மீண்டும் அடுத்த வாரம் ஹமீத்தும் திலகரும் சந்தித்து இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

இப் பேச்சுவார்த்தை தொடர்பாக பாரிஸிலுள்ள விடுதலைப் புலிகள் எந்தவிதமான அறிவித்தலும் விடவில்லை என்றும் இது குறித்து மௌனம் சாதிக்கிறது என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

இதேவேளை கனடாவில் இருந்து வெளிவரும் ஒருதமிழ் பத்திரிகையும் இது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ளது. (மி)

### ஆறு எலும்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

17-ம் திகதி வங்காலை முகாம் இராணுவத்தினர் ஐந்து ஆசிரியர்களை கைது செய்தனர் அவர்களில் இருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

முருங்கன் மத்திய மகா வித்தியாலய உப அதிபரான எஸ். வி. யோசேப்பிள்ளை, திரு நவரத்தினம் ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். ஆசிரியர்களான திரு. செபமாலை, திரு. விம்போடியல் குளோஸ்ட், புதுக்குளம் றோ. க. பாடசாலை அதிபர் திரு. ஜஸ்டின் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் பின்னர் வெளியிடப்படவில்லை. தற்போது ஆறு எலும்புக்கூடுகளுடன் செபமாலை, ஜஸ்டின் ஆகியோரின் அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.56)

உ
யாழ்ப்பாணம் திருவண்ணைநகர்
அருள்மிகு
வாலாம்பிகா சமேத விசுவலிங்க
வைத்தீசுவர சுவாமி திருக்கோயில்
(வண்ணை சிவன் கோவில்)
ஆலய பரிபாலன சபையினரால்
நடாத்தப்படும்
திருவாசகப் பெருவிழா
04-01-1993 — 06-01-1993
04 01.1993 திங்கட்கிழமை
(முதலாம் நாள் நிகழ்ச்சி)

காலை நிகழ்ச்சிகள்: காலம்: 9.00 மணி
தலைவர்: சைவப்புலவர் வ. கந்தசுவாமி அவர்கள்
(தலைவர் ஆலய பரிபாலனசபை)
9.00 — 9 30 மங்கள இசை:
திரு எஸ் ஆர். சோமசுந்தரம் குழுவினர்
(திருக்கோயில் மங்கள இசைக்குழு)
9.30 மங்களவிளக்கேற்றல்:
சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்
(திருக்கோயில் குருக்கள்
9.30 — 9 45 திருவாசகமோதல்: மகளிர் இல்ல மாணவிகள் துர்க்காபுரம், தெல்லிப்பழை.
முற்பகல்:
9.45 — 10 05 வரவேற்புரை
10-05 — 10 20 ஆசியுரை: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
10 20 — 10 50 தொடக்கவுரை:
திரு வே பொ. பாலசிங்கம்
(விசேட ஆணையாளர் யாழ். மாநகரசபை)
10.50 — 11.05 தலைமையுரை:
11.05 — 11.55 சிறப்புச் சொற்பொழிவு
திருமுறைச் செல்வி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
பொருள்: பாவையர்க்கே பாவை நோன்பு
11 55 நன்றியுரை

★ மாலை நிகழ்ச்சிகள் மாலை 6 15 மணி
தலைவர்: திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள்
(அதிபர், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி)
6.00 மங்கள இசை:

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| எஸ் சிதம்பரநாதன் | ரி. உதயசங்கர் |
| கே. கணேசன் | எஸ். சுதாகரன் |

மங்கள விளக்கேற்றல்: திரு. க. தர்மகுலசிங்கம்
திருவாசகமோதல்: (யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்கள்)
7.30 — 7.45 தலைமையுரை
7.45 ★ பட்டி மண்டபம் ★
நடுவர்: திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அ. இ. கம்பன் கழகம்)
பொருள்: நாயகி பாவத்தில் மணிவாசகர் பாடிய திருவாசகப் பாடல்களில் மேலோங்கி நிற்பது

| பெண்மை உணர்வே! | பக்தி உணர்வே! |
|---|---|
| திரு.க.சிவராமலிங்கம் | திரு. ஏ. ரி. பொன்னுத்துரை |
| திரு.க. குமாரதாஸ் | திரு. ஆறு திருமுருகன் |
| திரு. த. சிவகுமாரன் | திரு இரா. செல்லவடிவேல் |

விளம்பர அன்பளிப்பு
கயல்விழி நகை மாளிகை
224/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி 7109)

## மரண அறிவித்தல்

### கந்தையா- சின்னத்தம்பி

அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர்)

உடுவிலைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி காலமானார். இவரின் நல்லடக்க ஆராதனை பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
செல்வரஞ்சன் (ரஞ்சன்)
(மகன்)

(சி-7112

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under licence Number B/10336/8

அனைவருக்கும் இதயம் பொங்கும்
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!**
வளரும் குழந்தைகள் முதல்
தாய்மையடையும் தாய்மார் வரை
சிறந்த போஷாக்குணவு

யாழ். மருத்துவ சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்ட நிறையுணவு

# ஜீவாகாரம்
(போஷாக்குணவு)

**அண்ணா கோப்பி**

யாழ்ப்பாணம் - சுன்னாகம் - இணுவில்
திருநெல்வேலி கிளைகளில் கிடைக்கும்
(ஏ-2743)

## மூளைக் காய்ச்சலுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

மூளைக் காய்ச்சலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவர் ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த செல்வன் செல்வலிங்கம் சரிமிலன் (வயது-14) என்பவரே பலியானவராவார். [56]

## கால்நடைகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நெடுங்காணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிப்பிலவு, தண்டுவான் மாமடுச் சந்தி 17ம் கட்டை ஆகிய கிராமங்களில் தமிழ் மூ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் 18 பண்ணைகளைச் சேர்ந்த 412 கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் 14ம் 15ம் திகதிகளில் போடப்பட்ட இவ் ஊசியானது கால்நடைகளுக்கு நோய் ஏற்படாத வகையில் முன்னேற்பாடான ஓர் நடவடிக்கை ஆகும்.

அனைவருக்கும் பிறக்கும் புத்தாண்டு
சமாதான ஒளி கொடுக்கட்டும்
**மங்களம் பொங்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருந்து வகைகளின்
விற்பனையில் நம்பிக்கைக்குரிய
நிதான ஸ்தாபனம்:
**எஸ்ரி. மெடிக்கல்ஸ்,**
**ஆஸ்பத்திரி முன்பாக,**
**யாழ்ப்பாணம்.**
(ஏ-2745)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
**எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்**
பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்.
உன்னத கலை நயம் மிக்க நகைகளை
உங்கள் எழில்மிகு கேசத்திற்கேற்ற
அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றா
தங்கப் பவுண் நகைகளை செய்து பெற்றிட வாரீர்.
**சிறி அமலா நகை மாளிகை,**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-2717)

# ★ தொழிற் பயிற்சிகள் ★
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்புப்
பெறக்கூடியமுறையில குறைந்த காலத்தில் பயிற்சிகள் பெற:
**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

★ றேடியோ, T. V. வீடியோ டெக் றிப்பியறிங்:
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் தொழிற்பாடு திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதம்

★ றிவைண்டிங்:
மின் மோட்டார், மின் விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சாரப் பொருள்கள் றிவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப் படும்.
4 மாதம்

★ எலக்றிக் வயறிங்:
வீட்டு மின்சார வேலைகள். மின்சாரப் பொருள்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
2 மாதம்

★ மோட்டார் சைக்கிள் மெக்கானிசம்: 3 மாதம்
மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

★ AIRCONDITIONS AND REFREGERATION
சகல குளிர்சாதனமும் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்றப்படும்.
காலம் 5 மாதம்

★ SPOKEN ENGLISH:

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்**
05-01-93 கிழமை நாட்கள் 9-00 A. M.
09-01-93 (சனி, ஞாயிறு) 9-00 A. M.
O/L, A/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

# JAFFNA TECHNICAL INSTITUTE
றெயில்வே கடவை அருகாமை (மேல் மாடி)
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
(ஏ-2728)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
**V. வடிவேல்,**
பிராந்திய விற்பனையாளர்,
**லங்கெம்,**
**219, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ஏ-2736)

ஆசிரியர்கள், மாணவ மணிகள், ஆதரவாளர்கட்கு
எமது இதயம் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**தாதிப் பயிற்சி நெறி**
**Diploma in Nursing**
★ 6 மாத கால இலகு விரிவுரைகள்
★ பிரபல தகுதி வாய்ந்த வைத்தியர் குழு
★ பாரிமளி பயிற்சியுடன் கூடியது
★ இலவச ஆங்கில வகுப்பு
★ பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
ஆரம்பம்: 05-01-1993
(C.I.M.A., A.A.T., I.A.B., Typying, Computer Radio, T. V. Deck வகுப்புக்களும் நடைபெறுகின்றன.)
மேலதிக விபரங்கட்கு:-
North Ceylon Technical Institute,
14, St.Peter's Lane, Hospital Road, Jaffna.
(ஏ-2748)

1993ம் ஆண்டு சகல மக்களினதும் துன்பம் களைந்த ஆண்டாக இன்பம் பொங்கிட
# இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
சுவை ... சுவை ... என பேசிக் கொள்பவர்கள் ரவர் கோப்பி & கூல்பார் சுவையை மறந்துவிடவில்லை. கல்லூரி மாணவர்கள் கனவை நனவாக்க மீண்டும் உங்கள் ரசனையை ரவர் கோப்பி இவ்வாண்டு நிறைவு செய்யும் .........
சுவைதரும் இனிய பண்டங்களுக்கு மட்டுமல்ல ஐஸ்கிறீம் சர்பத் அனைத்திலும் பிரவேசிப்போம்
# ரவர் கோப்பி அன் கூல்பார்
**வெலிங்டன் சந்தி,** **யாழ்ப்பாணம்.**
(ஏ-2742)